**தலைப்பு 236 – அரசகரும மொழிகள் திணைக்களம்**

**------------------------------------**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தலைப்பு 236 – அரசகரும மொழிகள் திணைக்களத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2024 மே 15 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் திணைக்களத்திற்குரிய வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2024 மே 30 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அரசகரும மொழிகள் திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய

பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு திணைக்களத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் நேரொத்ததாக உள்ளது எனவும்,

(ஆ) முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் வழங்கப்பட்ட பரிந்துரைகள் அமுல்படுத்தப்பட்டிருந்தது.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் போது விற்றுத் தீர்க்கப்பட்ட ரூபா 2,687,265 தொகை நிதியல்லாத சொத்துக்கள் நிதிநிலைமைக் கூற்றில் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களிலிருந்து அகற்றப்பட்டிருக்கவில்லை. | இந்த ஆண்டின் போது இந்த விடயங்கள் சிகாஸ் முறைமையில் நாளதுவரையாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | ஆண்டின் போது விற்றுத் தீர்க்கப்பட்ட சொத்துக்களின் கிரயம் சரியாக கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 செலவின முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இலங்கை சனனாயக சோசலிச குடியரசின் நிதிப்பிரமாண கோவையின் நிதிப் பிரமாணம் 50 (II) இன் பிரகாரம் மதிப்பீடு இயலுமான வரை முழுமையாகவும் சரியாகவும் தயாரிப்பதற்கு கணக்கீட்டு உத்தியோகத்தர் கண்காணிக்க வேண்டிய போதிலும் கீழே குறிப்பிடப்படுகின்ற பிரகாரம் சேமிப்புக்கள் இடம்பெற்றிருந்தது. | | |
| (அ) 02 மூலதன செலவினங்களுக்குரிய மொத்த தேறிய றிதியேற்பாடு ரூபா 750,000 மற்றும் குத்தகை முறைமையில் தவணைப்பணம் செலுத்துவதற்காக செலுத்தப்பட்ட ரூபா 600,000 மொத்தத் தேறிய நிதியேற்பாடு முழுமையாக சேமிக்கப்பட்டிருந்தது. | தேசிய வரவு செலவு திட்ட சுற்றறிக்கை 01/2016 இன் பிரகாரம் செயற்பாட்டு குத்தகை முறைமையின் கீழ் திணைக்களத்திற்கு பெறப்பட்ட வான், வண்டியின் வருமானம் குத்தகை உடன்படிக்கையை நீடித்துக் கொள்ளும் நோக்கில் இந்த செலவின விடயத்திற்கு நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டிருந்ததுடன் தேசிய வரவு செலவுத் திட்ட சுற்றறிக்கை 01/2022 இன் பிரகாரம் அந்த உடன்படிக்கையை முடிவுறுத்துவதற்கு ஏற்பட்டமையினால் இந்த நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது என்பதை குறிப்பிடுகின்றோம். | மதிப்பீட்டின் பிரகாரம் சரியான திட்டங்கள் தயாரிக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஆ) 09 மீண்டெழும் செலவின விடயங்களுக்குரிய தேறிய நிதியேற்பாடு ரூபா 52,215,000 மற்றும் செலவினம் ரூபா 38,413,869 ஆனமையால் ஒவ்வொரு செலவின விடயத்திலும் 18 சதவீதம் முதல் 59 சதவீதம் வரையிலான வீச்சின் பிரகாரம் ரூபா 13,801,131 சேமிக்கப்பட்டிருந்தது. | உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்ட பிரகாரம் 2023.12.31 இல் உள்ளவாறு சில மீண்டெழும் செலவின விடயங்களில் சேமிப்பு காண்பிக்கப்பட்டிருந்த போதும் 2023 ஆம் ஆண்டுக்குரியதாக மேலும் செலுத்த வேண்டிய பொறுப்பாக காணப்பட்டது. | பொறுப்பில் குறைக்கப்பட்டு சேமிப்புகள் காணப்படுகின்றமையால் மதிப்பீடு சரியாக தயாரிக்கப்படல் வேண்டும். |
| (இ) 02 மூலதன செலவின வியங்களுக்குரிய தேறிய நிதியேற்பாடு ரூபா 750,000 மற்றும் செலவினம் ரூபா 344,460 ஆனமையால் அந்த செலவின விடயங்களில் முறையே 13 சதவீதம் மற்றும் 74 சதவீதம் ஆக கூட்டுமொத்தமாக ரூபா 405,540 சேமிக்கப்பட்டிருந்தது. | எதிர்பார்க்கப்பட்ட பிரகாரம் இயந்திர உபகரணங்கள், புனரமைப்பு மற்றும் அபிவிருத்தி செய்யும் செலவினங்கள் மேற்கொள்ளாமை இந்த சேமிப்புக்கு காரணமாக இருந்ததை குிப்பிடுகின்றோம். | மதிப்பீடு சரியாக தயாரிக்கப்படல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ நலிவுகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) மொரட்டுவை பல்கலைக்கழகத்தால் தயாரிக்கப்பட்ட கிரயம் ரூபா 10,810,000 ஆன சிங்களம், தமிழ் மென்பொருளின் சரியான தன்மை தொடர்பாக உறுதிப்படுத்தலொன்று அரசகரும மொழிகள் ஆணையாளர் நாயகத்தால் 2022 பெப்ரவரி 14 ஆம் திகதி செயற்திட்ட பணிப்பாளரிடம் இருந்து | இதனை பயன்படுத்துவது தொடர்பாக திணைக்களம் மொழிபெயர்ப்பு மற்றும் ஒன்றிணைந்த சேவையின் 61 மொழி பெயர்ப்பாளுக்காக 2023.01.12 ஆம் திகதி பயிற்சி ஒன்றும் மற்றும் 2023.02.14 ஆம் திகதி Admin & Manager privileges ஆக திணைக்கள தகவல் தொழிநுட்ப உத்தியோகத்தர் மற்றும் மேலும் ஒரு | மென்பொருளின் குறைபாடுகளை இனங்கண்டு மொழிபெயர்ப்பு நடவடிக்கைகளுக்காக தொடச்சியான பங்களிப்பை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கோரப்பட்ட போதிலும் அது வழங்கப்படாதிருந்ததுடன் தற்போது வரையிலும் அந்த மென் பொருளுக்காக செலவிடப்பட்ட கிரயம் பயனற்றதாக காணப்பட்டது. | உத்தியோகத்தரை வழங்குவதற்காக தேவையான பயிற்சி ஒன்று தற்போது வழங்கப்பட்டுள்ளது. இதுவரையில் மொழிபெயர்ப்பு மென்பொருளை பயன்படுத்துவதற்கு 189 வாசகர்கள் மற்றும் 19 நிறுவனங்களுக்கு இடமளிக்கப்பட்டுள்ளது. இவ்வாறே எதிர்காலத்தில் அரசாங்கத்தின் பல்வேறு நிறுவனங்களின் உத்தியோகத்தர்களுக்காக இந்த மென்பொருளை பயன்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளப்படுகின்றது என்பதை மேலும் குறிப்பிடுகின்றோம். | |
| (ஆ) | அரச ஊழியர்கள் மற்றும் பகுதி அரச ஊழியர்களினால் பூர்த்தி செய்யப்பட வேண்டிய வாய்மொழி மூல, எழுத்து மூல மற்றும் பேசும் மொழித் திறன் பாடநெறிக்காக 2016 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 5,347,048 பெறுமதியான புத்தக இருப்புக்கள் மற்றும் 2018 ஆம் ஆண்டில் அச்சிடப்பட்டிருந்த ‘‘லியன சிங்கள’’ 54 புத்தகங்கள் விற்பனைக்கு பொருத்தமற்ற தன்மையில் விற்பனை செய்யப்படாத மற்றும் பயன்படுத்த முடியாத சுற்றாடல் விஞ்ஞான புத்தகங்கள் 477 மற்றும் உயிரியல் விஞ்ஞான புத்தகங்கள் 71 களஞ்சியத்தில் காணப்பட்டது. | அரசு நிருவாக அமைச்சின் செயலாளரின் 2021.12.28 ஆம் திகதிய இலக்கம் MPA/ADM/EST/GA19/Dep. Lan. மற்றும் கடிதத்தின் பிரகாரம் புத்தகங்கள் அரசாங்கத்தின் நிறுவனம்/ பாடசாலை நூலகங்களுக்கு இலவசமாக விநியோகிப்பதற்கு அங்கீகாரம் கிடைத்திருந்ததை அறிவிப்பதுடன் தற்போது வரையிலும் கிடைக்கின்ற கோரிக்கையின் பிரகாரம் புத்தகங்களை வியோகிக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் மேல் உறைகள் சேதமடைந்திருந்த 54 புத்தகக்களில் உறைகளை மீண்டும் தயாரித்து விற்பனை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | தேவையினை இனங்கண்டு போதியளவான புத்தகங்கள் மாத்திரம் அச்சிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| (இ) 2020 ஆகஸ்ட் 17 ஆம் திகதி ரூபா 314,450 செலவில் கொள்வனவு செய்யப்பட்ட குத்தகை விற்பனை முகாமைத்துவ மென்பொருள் செயலிழந்து காணப்பட்டது. மேலும் கொரோனா வைரஸிலிருந்து பாதுகாப்பதற்கு அணியப்படுகின்ற ரூபா 130,000 பெறுமதியான அணியக்கூடிய 400 உடைத் தொகுதிகள் விநியோகிக்கப்படாமல் களஞ்சியத்தில் காணப்பட்டது. | இந்த முறைமை தற்போது செயலிழந்து காணப்படுவதுடன் இது தொடர்பாக உரிய நிறுவனம் மூடப்பட்டுள்ளமையினால் முறைமையினை மீண்டும் நாளதுவரையான நிலைமைக்கு உட்படுத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளமுடியாத நிலைமையில் காணப்பட்டது. எனினும் 04 வருடங்களுக்கு அண்மித்த காலம் முறைமையின் மூலம் எதிர்பார்க்கப்பட்ட நடவடிக்கைகள் நிறைவேற்றப்படுவதுடன் எதிர்காலத்தில் ஏனைய நிறுவனங்கள் ஊடாக முறைமையை மீண்டும் தயாரித்தல் அல்லது புதிய முறைமையை கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் மற்றும் 400 பாதுகாப்பு ஆடைத் தொகுதிகளின் தேவைகளை கவனத்தில் கொண்டு வைத்தியசாலைகளுக்கு விநியோகிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | தேவையினை இனங்கண்டு கொள்வனவு செய்வதற்கும், கொள்வனவு செய்தலை தீர்மானித்தல் தொடர்பாக உரிய உத்தியோகத்தர் களின் பொறுப்பின் கீழ் மேற்கொள்வதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 4. மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சிரேஷ்ட நிலையின் பதவிகளில் 06 வெற்றிடங்களும், மூன்றாம் நிலைப் பதவிகளில் 34 வெற்றிடங்களும், இரண்டாம் நிலையில் 13 வெற்றிடங்களும் மற்றும் ஆரம்ப நிலையில் 05 வெற்றிடங்களும் ஆக 58 வெற்றிடங்கள் காணப்பட்டதுடன் வெற்றிடங்களை நிரப்புவதற்கோ அல்லது பதவிகளை திருத்துவதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அரசகரும மொழிகள் ஆணையாளர் (இலங்கை நிருவாக சேவை) பதவி மற்றும் அலுவலக ஊழியர் சேவையின் வெற்றிடங்கள் தற்போது பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. பிரதி ஆணையாளர் (இலங்கை நிருவாக சேவை) 02 பதவிகள் மற்றும் பிரதி உதவிப் பணிப்பாளர் (தகவல் தொழிநுட்பம்) தகவல் தொழிநுட்ப உத்தியோகத்தர் | அத்தியவசியப் பதவிகளை நிரப்புவதற்கும் அல்லது அங்கீகரிக்கப்பட்ட தேவையற்ற பணியினரை நிறுத்துவதற்கோ நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

பதவி மற்றும் மொழி பெயர்ப்பளர் (ஒன்றிணைந்த சேவை) என 05 பதவிகளை நிரப்புமாறு அரச நிருவாக அமைச்சுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதுடன் திணைக்கள மயப்படுத்தப்பட்ட ஆணையாளர் / உதவி ஆணையாளர் திணைக்கள மயப்படுத்தப்பட்ட பதவியான 08 மொழிபெயர்ப்பு அத்தியட்சகர் பதவிகள் மற்றும் 03 மொழி அத்தியட்சகர் மொழி (பெயர்ப்பு) பதவிகள் என்பவற்றின் ஆட்சேர்த்தல் நடைமுறையை அங்கீகரிப்பதற்காக அனுப்பப்பட்டுள்ளது.

03 நூலகர் பதவிகள், 09 முகாமத்துவ உதவியாளர் பதவிகள் மற்றும் 01 தகவல் தொழில்நுட்ப உதவியாளர் பதவிகளுக்கு தொழிநுட்ப உதவியாளர் (திணைக்களம்) பதவிகளுக்காக ஆட்சேர்க்கும் நடைமுறை தயாரிக்கப்படுகின்றது.

02 சாரதி பதவிகளுக்காக ஆட்சேர்ப்பு நடவடிக்கைகள் இறுதிக் கட்டத்தில் காணப்படுவதுடன் மொழி பெயர்ப்பாளர் (திணைக்களம்) 17 பதவிகளுக்காக ஆட்சேர்த்தல் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது.